### 93வது பிறந்தநாள்: இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின்

# உரிமைக்காக குரல் கொடுத்த பெருமைக்குச் சொந்தக்காரர் முரசொலி மாறன்!

## சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக.18-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்தநாளை யொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் உரிமைக்காக குரல் கொடுத்த பெருமைக்குச் சொந்தக்காரர் முரசொலி மாறன் அவர்கள் என்று புகழாரம் சூட்டினார்.

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாகவும் கழகத்தலைவர் அவர்களின் அன்புக்குரியவராகவும் திகழ்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் மறைந்த திரு.முரசொலி மாறன் அவர்களின் பிறந்த நாள் இன்று!**

**கழகத்தின் வளர்ச்சிக்காகவும் - திராவிட இயக்கக் கொள்கைகள் திக்கெட்டும் பரவிடவும் அயராது உழைத்தவர்.**

**இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் உரிமைக்காக குரல் கொடுத்த பெருமைக்குச் சொந்தக்காரர்.**



**திரு.முரசொலி மாறன் அவர்களின் பணிகளை இந் நாளில் நினைவுகூர்வோம்.**

**அவர் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேச்சை அதிக முறை நீக்கியது இதுவே முதல் முறை!

# சட்டப்பேரவையில் மரபை மீறிப் பேசிய அமைச்சர்களின் பேச்சுகள் நீக்கம்!

## சபாநாயகர் உத்தரவை மீறி ஆளுங்கட்சியினர் பேச முயற்சி!

சென்னை, ஆக. 18-

சட்டப்பேரவையில், மரபுகளை மீறி பேசிய ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்ட 3 அமைச்சர்களின் பேச்சுக்களை சபாநாயகர் நீக்கம் செய்து உத்தரவிட்ட நிலையில், அவரது உத்தரவை மீறியும் அமைச்சர்கள் பேச முயற்சித்தது அவையில் சலசலப்பை ஏற்படுத்தியது.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு உரிய பதிலை சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அளிக்காமல், துறைக்கு சம்பந்தமே இல்லாத அமைச்சர்கள் ஏதேதோ பேசி வருகின்றனர். அவையின் மாண்பைச் சீர்குலைக்கும் வகையில் த.வெ.க. அமைச்சர்கள் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் பேசி வருவதும், அதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததும், சபாநாயகர் கண்டிக்கும் நிகழ்வுகளும் நடந்து வருகின்றன.

இந்தநிலையில், இன்று சட்டப்பேரவையில் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார், மற்றும் ரஞ்சித் ஆகியோர், அவையின் மாண்பை கெடுக்கும் வகையில் பேசியதை, சபாநாயகர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி உத்தரவிட்டார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை வரலாற்றில், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் பேச்சை அதிகமுறை நீக்கி உத்தரவிட்டிருப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆன்லைன் மருந்து வர்த்தகத்தில் – மருந்துகளை

# ஒழுங்குபடுத்தும் கொள்கைகளை செயல்படுத்த வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஆக.18-*

*ஆன்லைன் மருந்து வர்த்தகத்தில் மருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கைகளை செயல்படுத்த வேண்டும் என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஷ்குமார் வலியுறுத்தினார்.*

*டெல்லியில் நடைபெற்ற பாராளுமன்ற மாநிலங்களவை மழைக் கால கூட்டத் தொடர் கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ஆன்லைன் மருந்து வர்த்தகத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு நேரத்தில் பேசியதாவது:-*



*ஆன்லைன் மருந்து விற்பனை வணிக இணையதளங்களால் மருந்துச்சீட்டு இல்லாமல் ஒழுங்குபடுத்தப்படாத இணையவழி மருந்து விற்பனை ஆகும். ஆன்லைன் மருந்தகங்கள் பாதுகாப்பான இணையவழி மருந்து விற்பனையை உறுதி செய்வதற்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு தேவை.*

*கோவிட்-19 பெருந்தொற்றின் போது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மீதான நமது சார்பு நிலை அதிகரித்தது, மேலும் இந்தப் போக்கு தொடர்கிறது. இருப்பினும், இது பொது சுகாதாரத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*ஏனெனில் சரிபார்க்கப்படாத இணையவழி மருந்து விற்பனையானது லட்சக்கணக்கான உயிர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. மேலும், மக்கள் மருந்துகளை வாங்குவதற்கு சரிபார்க்கப்படாத இணையவழித் தகவல்களை நம்புவது, இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறது. முறையான மருந்துச்சீட்டுகள் இருந்தாலும், உள்கட்டமைப்பு மற்றும் கொள்கைகள் இல்லாததால் இணையவழி மருந்துகளைச் சரிபார்க்க முடிவதில்லை.*

*எனவே, இந்தப் பிரச்சினையை முழுமையாக ஆராய்ந்து, ஆன்லைன் மருந்தகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கைகளைச் செயல்படுத்துவதைக் கருத்தில் கொள்ளுமாறு ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*கூடுதலாக, மின்னணு மருந்துச்சீட்டு சேவைகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பை நிறுவுவதும், ஆன்லைன்மருந்தகங்களின் முறையான செயல்பாட்டை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை இயற்றுவதும் மிக அவசியமாகிறது. நாம் பொதுப் பாதுகாப்பை உறுதி செய்து, ஒழுங்குபடுத்தப்படாத இணையவழி மருந்து விற்பனையால் ஏற்படக்கூடிய தீங்குகளைத் தடுக்க வேண்டும்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

### மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

# கழக நிர்வாகி ஜெயசேகருக்கு நிதியுதவி!

## பல்லாவரம் இ. கருணாநிதி வழங்கினார்!

*பல்லாவரம், ஆக. 18-*

*பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் தெற்குப் பகுதி 20-ஆவது வட்டக் கழகத்தின் பொருளாளர் ஜெயசேகர் வயது முதிர்வின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று அந்த நிலையில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு பள்ளிக்கரணையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என ஊடகங்களில் தகவல்கள் வந்திருந்தன.*

*இந்த தகவலை அறிந்ததும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான இ. கருணாநிதி உடனடியாக அவர் மனைவியிடம் இது குறித்து தகவல் கேட்டு அறிந்ததால் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பதை ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை என்று அவர் மனைவியிடம் கேட்டுவிட்டு உடனடியாக நாளை காலை நான் நேரில் மருத்துவமனைக்கு வந்து உங்களை சந்திக்கிறேன் என்று நேற்று இரவு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.*

*அதைத்தொடர்ந்து திங்கள்கிழமை காலை தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2-ன் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை கழக நிர்வாகிகள் ஆகியோர்களுடன் தனியார் மருத்துவமனைக்கு நேரில் சென்று தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் ஜெயசேகரை சந்தித்து உடல் நலம் விசாரித்து உடல் நலம் சீக்கிரமாக குணமடைய ஆறுதல் கூறி அவரின் மருத்துவ செலவுக்காக ரூபாய் 50,000 ரொக்கமாக அவர்களிடம் வழங்கினார்.*

*அருகில் இருந்த அவரது மனைவியிடமும் ஆறுதல் கூறி மருத்துவரை நேரில் சந்தித்து அவரின் உடல் நலம் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும் அவரின் சிகிச்சை நிலைமை குறித்து தெரிவிக்குமாறு ஏதாவது உதவி தேவைப்பட்டால் தெரிவிக்குமாறு அவர்கள் மனைவியிடம் கேட்டுக் கொண்டார்.*

*அப்பொழுது மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், மாவட்ட பிரதிநிதி க.ரமேஷ், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ராஜவேலு, ஜெயசெகரின் மனைவி மற்றும் உறவினர்கள் உடன் இருந்தனர்.*

### த.வெ.க. அரசின் 100 நாள் ஆட்சியில்

# ஏதாவது ஒரு சாதனை செய்துள்ளார்கள் என சொல்ல முடியுமா?

## காட்பாடியில் கழக பொதுச் செயலாளர் – முன்னாள் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**வேலூர், ஆக.18 -**

**கர்நாடகாவில் மேகதாது அணையை கட்டினால் தமிழ்நாட்டிற்கு தண்ணீரே வராது என காட்பாடியில் கழக பொதுச் செயலாளர், முன்னாள் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறினார்.**

தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் காட்பாடி காந்திநகரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு;

**கேள்வி:** *கர்நாடகாவில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு தமிழகத்திற்கு வரும் போது குறைந்து வருவது குறித்து?*

**பதில்;** கர்நாடக பகுதியில் ஒருவேளை நீர் திருட்டு நடைபெறலாம். இதனை கர்நாடகா அரசுதான் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தை பொறுத்த வரை மாநில எல்லையான பிலிகுண்டுவில் தான் நீரின் அளவை அளப்போம். அதை வைத்துத்தான் நமக்கு எவ்வளவு நீர் வருகிறது என்பதை கணக்கிட முடியும். அந்த வகையில் நமக்கு வரவேண்டிய நீரை அவர்கள் கொடுத்தே ஆக வேண்டும். நீர் திருட்டு குறித்து அவர்கள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நமக்கு வர வேண்டிய நீரை தமிழக அரசு கேட்டுப் பெற வேண்டும்.

**கேள்வி:** *புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு 100 நாளை நிறைவு செய்திருக்கிறது. இதை எப்படப் பார்க்கிறீர்கள்?.*

**பதில்:** 100 நாளில் இதை சாதித்தோம் என ஏதாவது ஒன்றை சொல்லச் சொல்லுங்கள். 100 நாளில் இமயமலை அளவுக்கு சாதனை செய்ய முடியாது தான். ஆனால் ஒரு குன்று அளவிற்காவது சாதனை செய்துள்ளோம் என சொல்ல முடியுமா? பேசிகொண்டிருக்கிறார்களே தவிர எந்க் காரியத்திலும் இறங்கவில்லை.

**கேள்வி:** *பா.ஜ.க.,வோடு தி.மு.க. கூட்டணி வைப்பதாக த.வெ.க. கூறுகிறது. ஆனால் அதே த.வெ.க. பா.ஜ.க.வை எதிர்த்து பேசுவதில்லை என எதிர்க்கட்சிகள் கூறுகிறது இது குறித்து?.*

**பதில்:** நாங்கள் தொடர்ந்து சொல்லி வருகிறோம். தி.மு.க.விற்கும் பா.ஜ.க .வுக்கும் எந்த உறவும் இல்லை, ஒட்டும் இல்லை என இதை திட்டவட்டமாக சொல்லி உள்ளோம். ஐடியாலஜி பிரகாரமே எங்களுக்கு ஒத்து வராது. எங்களுடைய கொள்கை, மரபு வேறு. அரசியல் அளவிலாவது உருப்படுமா என்றால் அதுவும் சரியாகப் படவில்லை.

**ஒன்றியத்திலும் ஆட்சி மாற்றம் வேண்டும்!**

**கேள்வி:** *மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்ட கூட்டத்திற்கு பிறகு பா.ஜ.க.வினர் அந்த இடத்தை பூஜை செய்து தூய்மை செய்தது குறித்து?*



**பதில்:** அந்த பழமைவாதிகள் இன்னும் மாறவில்லை என தெரிகிறது. இவையெல்லாம் மாற வேண்டும் என கேட்டால் மத்தியிலும் சுயமரியாதை உள்ள கட்சி ஆட்சிக்கு வர வேண்டும்.

**மேகதாது அணை கட்டினால்?**

**கேள்வி:** *1969இல் நீர்வளத் துறை அமைச்சராக இருந்தவர் தான் காவிரி உரிமையை விட்டுக் கொடுத்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் குற்றம் சாட்டியிருந்தது குறித்து?*

**பதில்:** காவிரி பிரச்சினையை சுப்ரீம் கோர்ட் தீர்த்து வைத்து விட்டது. அதற்காக கர்நாடகா ஒரு காரணத்தை கற்பித்து வருகிறார்கள். இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள் 10 டி.எம்.சி வர வேண்டியது தமிழ்நாட்டிற்கு ஏழு டி.எம்.சி.தான் வருகிறது என்று. ஆனால் மேகதாது அணையை கட்டினால் தமிழகத்திற்கு தண்ணீரே வராது. மழைப் பொழிவு உள்ள யாருக்கும் உரிமை கோராத இடத்தில் தான் மேகதாது அணையை கட்ட கர்நாடகா முயற்சிக்கிறது.

**டெல்டா பகுதிகள் மிகவும் வறண்டு போகும்!**

மேகதாது தமிழ்நாட்டின் உயிர்நாடி பிரச்சினை. மேகதாது கட்டி விட்டால் தமிழ்நாட்டில் பஞ்ச பிழைப்பு தான் பிழைக்க வேண்டும், டெல்டா பகுதிகள் மிகவும் வறண்டு போய்விடும் அதில் எந்த சந்தேகமும் இல்லை.

**கேள்வி:** *நயினார் நாகேந்திரன், முதல்வர் தாய் குறித்து அவதூறாகப் பேசியது குறித்து?*

**பதில்:** நான் அதை முழுசாக பார்க்கவில்லை. நயினார் நாகேந்திரன் அப்படி பேசுபவர் அல்ல. நிதானமான சுபாவம் கொண்டவர். ஆனால் அவர் சேர்ந்து இருக்கும் இடம் அப்படி இருக்குமா என தெரியவில்லை.

**கேள்வி;** *எம்.ஜி.ஆர். தனது இறுதிகாலத்தில் அ.தி.மு.க.வை தி.மு.க.வுடன் இணைப்பதாக ஏற்கனவே நீங்கள் கூறி இருந்தீர்கள். அ.தி.மு.க. இப்போது இருக்கும் நிலையில் எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?*

**பதில்:** எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் இன்றைக்கு இருக்கும் நிலையில் அ.தி.மு.க. இருந்திருக்காது, எம்.ஜி.ஆர். இல்லாததால் தான் இந்த நிலையில் உள்ளது. எம்.ஜி.ஆர். இறுதக் கட்டத்தில் அந்த நிலைக்கு வந்தார். அதுக்கப்புறம் அவர் தனது நிலையை மாற்றிக் கொண்டார். அந்த நிலைப்பாட்டை அவர் எடுத்ததாக பேச்சு வழக்கில் சொன்னது தான். அதைத் தவிர அதற்கு பெரிய ஆதாரம் கிடையாது.

**கேள்வி;** *அ.தி.மு.க.,வில் இருந்து த.வெ.க., கட்சிக்கு செல்வது குறித்து?*

**பதில்:** அது உட்கட்சி விவகாரம். அது குறித்து ஒன்றும் சொல்ல முடியாது. அவர்களுக்குச் சொல்லும் அளவிற்கு நான் பெரிய மனிதன் கிடையாது.

**கேள்வி:** *பெண்கள் குறித்து அவதூறாகப் பேசியதாக எழுந்த விவகாரத்தில் உதயநிதியை நீதிமன்றம் 12 மணி வரை கைது செய்ய தடைவிதித்தும் உடனடியாக கைது செய்யப்பட்டார். அதேபோன்று ஏன் நயினார் நாகேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை?*

**பதில்:** பத்திரிகையாளர்களின் இந்தக் குமுறலை முதல்வர் ஜோசப் விஜய்க்கு அர்ப்பணம் செய்கிறேன். நயினார் நாகேந்திரன் மீது கை வைத்தால் இந்த ஆட்சியை மத்திய அரசு ஒரே நாளில் முடிவுக்குக் கொண்டு வந்து விடும்.

**கேள்வி:** *தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எப்படி உள்ளது?*

**பதில்:** இன்றைக்கு பத்திரிகையை புரட்டினால் பக்கத்திற்கு 4 கொலை, பாலியல் பலாத்காரம் என செய்தி வருகிறது. அப்படிப்பட்ட செய்திகள் பத்திரிகையில் நிரம்பி வழிகிறது. இப்படித்தான் சட்டம் ஒழுங்கு உள்ளது. ஆனால் இதைப் பற்றி முதல்வர் அக்கறை கொள்ளவில்லை. இளைஞர் கொலை வழக்கில் கோஷ்டி மோதல் என சொல்கிறார்கள். அது சரியா? யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதயநிதியை சட்டசபையில் பேசக்கூடாது என்பதற்காக காரண காரியம் இல்லாமல் கைது செய்தார்கள். இளைஞர் கொலை வழக்கில் கோஷ்டி மோதலாக இருந்தாலும் அடித்துக் கொல்வது சரியா? இதுவரை எத்தனை பேரை கைது செய்துள்ளீர்கள்?

காட்பாடியில் அண்மையில் மட்டும் மூன்று கொலை நடந்துள்ளது. நான் எம்.எல்.ஏ.வாக இருந்தபோது 3 கொலை நடந்ததாக சரித்திரமே கிடையாது. ஆகையால் போலீசுக்கு முழு பவர் கொடுத்துள்ளார் கள் என தெரியவில்லை. சட்டம் ஒழுங்கு என்பது முதல்வர் கையில் இருக்கும். இந்த ஆட்சியில் சட்ட ஒழுங்கிற்கு சவ அடிக்கும் கடைசி அடி அடிக்கப் பட்டது போல் உள்ளது.

இவ்வாறு துரைமுருகன் அவர்கள் கூறினார்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# முரசொலி மாறன் 93வது பிறந்தநாள் விழா!

## டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

*திருவண்ணாமலை, ஆக். 18-*

*திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்க தத்துவ பேராசானுமான முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.*

*17.08.2026 திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திராவிட இயக்க தத்துவ பேராசான் முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.*

*முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*விழாவில் மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா விஜயரங்கன், மாநில தொ.மு.ச. துணைச் செயலாளர் க.சௌந்தரராசன் மற்றும் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.*

*பிறந்த நாள் விழாவில் மாநில அமைப்புசாரா தொ.மு.ச., ஏ.ஏ.ஆறுமுகம், து.சக்கரவர்த்தி, மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், எஸ்.டி. ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், பவர் அன்பரசு, இரா.அன்பரசு, கற்பகம் சரவணன், பகுதி பொறுப்பாளர் ந.சீனுவாசன், பா. ஷெரீப், மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் வட்டி அருணாச்சலம், இல.குணசேகரன், வழக்கறிஞர்கள் எஸ். கண்ணதாசன், ந.முரளி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.வெங்கடேஷ், ஆ.தே.முருகையன், சுனாபேகம், பச்சையம்மாள்யேசு, கஸ்தூரி, காமாட்சிபாண்டியன், இளைஞர் அணி சபரி, வ.சம்பந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

*நிறைவாக நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.*



கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் வி.இராஜேந்திர ராஜ் அவர்களின் மூத்த மகள் ஜீனா - மணமகன் பரத் திருமண விழா நாகர்கோவிலில்,புனித வளனார் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், பேரவை மாநில செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், துணைச் செயலாளர்கள் திருச்சி. எழில்மாறன் செல்வேந்திரன், சைதை எம்.எஸ். ஹரிபாபு, என்.எஸ். மாதேஸ்வரன், சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் , மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நண்பர்கள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.